சங்கமம் தமிழ்ப்பள்ளி
Sangamam Tamil School

# சங்கமச் சுவடுகள்

இதழ் - 1 • மே 2026




இதழின் உள்ளே...

தமிழ் மொழி தொன்மையும் பன்மையும
அறிதலே இன்பம்

# சங்கமச் சுவடுகள்

மே 2026

ஆசிரியர் இயக்குநர் · EDITORIAL DIRECTOR

**கணேஷ் மணிவண்ணன்**

படைப்பு இயக்குநர் · CREATIVE DIRECTOR

**பத்மநாபன் பொன்னையா ராஜு**

மெய்ப்பு திருத்துநர் · PROOFREADER

**சத்யா சந்திரவடிவேல்**

ஆலோசனைக் குழு · REVIEW COMMITTEE & BOARD

**ஜெயகுரு சீத்தாராமன்**
President · தலைவர்

**சங்கர் ராமலிங்கம்**
Vice President · துணைத் தலைவர்

**கணேஷ் மணிவண்ணன்**
IT Director · தகவல் தொழில்நுட்பம்

**ரம்யா அருண்**
Event Director · நிகழ்வுகள்

**பழனியப்பன் சங்கரகுமார்**
Finance Director · பொருளாளர்

**சதீஷ் சிவகுழந்தை**
Facilities Director · வசதிகள்

**செல்வக்குமார் முத்துசாமி**
Curriculum Director · பாடத்திட்டம்

© 2026 · சங்கமச் சுவடுகள்

# ஆசிரியர் கடிதம்

அனைவருக்கும் வணக்கம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உயரிய சிந்தனையோடு, நம் புலம்பெயர் மண்ணில் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் உன்னதப் பணியைச் செய்து வருகிறது சங்கமம் தமிழ்ப் பள்ளி. ஒரு மொழியைக் கற்பது என்பது வெறும் எழுத்துக்களையும் இலக்கணத்தையும் கற்பது மட்டுமல்ல; அது எண்ணங்களை வெளிப்படுத்தும் கலை, நம் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் ஒரு ஊடகம். அந்த வகையில்

நமது பள்ளியின் முன் வெளியீடான மின்மினி இதழலின் ஒரு மறு முன்னெடுப்பாக, 2025 -26 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளி மின்னணு ஆண்டு மலரை சங்கமச்சுவடுகள் எனும் மாணவர்களால் தேர்வு செய்யப்பட்ட பெயருடன் உங்கள் கைகளில் ஒப்படைப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்!

நம் பள்ளி மாணவர்கள் வகுப்பறைகளில் கற்ற தமிழையும், தங்களின் கற்பனைத் திறனையும் கொண்டு உருவாக்கிய படைப்புகளின் அரிய தொகுப்பே இந்த ஆண்டு மலர். மாணவர்களைத் தமிழ் வழியில் வழிநடத்தும் ஆசிரியர்களின் அனுபவப் பகிர்வுகள், வழிகாட்டுதல் கட்டுரைகள் மற்றும் பள்ளியின் வளர்ச்சியில் என்றும் துணையாக இருக்கும் பெற்றோர்களின் எண்ணங்களின் வெளிப்பாடுகள் ஆகியவை இம்மலருக்கு மேலும் சிறப்புச் சேர்க்கிறது.

கனவாகத் தொடங்கி, இன்று நனவாகி நம் கைகளில் தவழும் சங்கமச்சுவடுகளை உருவாக்கப் பின்னணியில் நின்றவர்கள் பலர். தங்களின் அன்றாட வாழ்வின் ஓட்டங்களுக்கு நடுவே, குழந்தைகளை ஊக்கப்படுத்தி படைப்புகளை அனுப்பிய பெற்றோர்களுக்கும், மாணவர்களின் திறமைகளைச் செதுக்கிய ஆசிரியர்களுக்கும், இந்த மலரை வடிவமைக்க அரும்பாடுபட்ட ஆசிரியர் குழுவிற்கும் நம் நெஞ்சார்ந்த நன்றிகள்.

நம் பள்ளியின் இந்தப் புதிய முயற்சி மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை மேலும் தூண்டும் என்பதில் ஐயமில்லை. சங்கமச் சுவடுகள் நம் குழந்தைகளின் பள்ளிப் பருவ நினைவுகளைத் தாங்கி நிற்கும் ஒரு காலப் பெட்டகம்!

வாசிப்போம், நம் குழந்தைகளின் தமிழ்ப் பயணத்தைக் கொண்டாடுவோம்!

"தமிழ் வளர்ப்போம், தலைமுறை காப்போம்!"

சங்கமம் தமிழ்ப் பள்ளி நிர்வாகக்குழு – 2025-26.

**சங்கமம் தமிழ்ப் பள்ளி நிர்வாகக்குழு**
ஆசிரியர்

# தமிழ் மொழி தொன்மையும் பன்மையும்

**சங்கீதா அறிவறிஞன், நிலை 4B ஆசிரியர்**

தமிழ் மொழியானது இன்றும் பல நாடுகளில் பேசப்படும் உலகின் பழமையான சில மொழிகளில் ஒன்றாகும். இதன் எழுத்து முறை மிகவும் எளிமையானது மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான எழுத்துக்களை கொண்டது. இது இரண்டாயிரம் ஆண்டு வரலாறு மற்றும் மேலான இலக்கியத்தை உடைய ஒரு பாரம்பரிய மொழி.

தமிழ் இலங்கையிலும், சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் பேசப்படுகிறது. இந்த மூன்று நாடுகளிலும் இது ஒரு அதிகாரபூர்வ மொழியாகும். வேறு எந்த இந்திய மொழிக்கும் இந்த சிறப்பு நிலை கிடைக்கப்பெறவில்லை.


மேலும், அதிகாரபூர்வ மொழிகளில் ஒன்றாக இல்லாவிட்டாலும், முரிசியஸ் (Mauritius), ரீயூனியன் (Reunion) (இந்திய அயலக (overseas) நாடாக உள்ள ஒரு பிரெஞ்சு கடற்கரை மாவட்டம்) மற்றும் தென் ஆப்பிரிக்காவின் குவா-ஸுலு நாட்டல் (Kwa-Zulu Natal province) -இல் தமிழ் குறைந்தபட்ச மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் கனடாவில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் தமிழ் குடியேறிகள் உள்ளனர் . தமிழ் பல வார்த்தைகளுக்கு பல பொருள்கள் (அர்த்தங்கள்) கொண்ட ஒரு செம்மையானது. மேலும் ஓர் எழுத்து சொற்கள் தமிழில் உள்ளன. எ. கா: ஆ (பசு), தீ (நெருப்பு), இ - 'இந்த', உ - 'உந்த', ஊ - (ஊன், இறைச்சி), க - நெருப்பு., கா - (சோலை), நா - நாக்கு, ...

தமிழ் மொழியின் தொன்மையை உலகுக்கு எடுத்துக் காட்டியது, கீழடி எனும் ஊரில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சியாகும். இங்கு கிடைத்த பானைகளில் காணப்படும் எழுத்துக்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டை சார்ந்தது மட்டுமல்ல, மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பா நாகரிக கால எழுத்துக்களுடன் ஒத்து போகின்றது. இந்த கண்டுபிடிப்பு தமிழின் தொன்மையை பறை சாற்றுகிறது.

தமிழ் வணிகர்கள் தங்களது பண்டங்களை எகிப்துக்கு கொண்டு செல்லும்போது (இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்) எழுதிக் கொடுத்த ஒப்புதல் சீட்டு பிரித்தானிய காட்சியகத்தில் உள்ளது.

எகிப்தில் valley of kings என்ற சமாதி பள்ளத்தாக்கின் சில வாயில்களில் "சிகை கொற்றன்" எனும் பெயர் பொறிக்கப்பட்டு உள்ளது. (இவ்வெழுத்துக்களின் காலம் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என கண்டறியப்பட்டுள்ளது.)



நாய்க்குட்டி

— விசாகா சௌந்தரம் (நிலை 5B)

எங்கள் வீட்டு நாய்க்குட்டி!
அழகாய் இருக்கும் நாய்க்குட்டி!
எங்கள் வீட்டு நாய்க்குட்டி!
வாலை ஆட்டும் நாய்க்குட்டி!
புதிதாய் யாரும் வந்தால்
குரைத்து விரட்டும் நாய்க்குட்டி!
காலை சுற்றும் நாய்க்குட்டி!
பின்னால் வரும் நாய்க்குட்டி!
எங்கள் வீட்டு நாய்க்குட்டி!
நன்றி உள்ள நாய்க்குட்டி!

**Poem**

விசாகா சௌந்தரம் நல்லக்குமார், நிலை 5B



**Poem**

விசாகா சௌந்தரம் நல்லக்குமார், நிலை 5B



ரிதானிகா பூபதிராஜா, நிலை 4B



ரிதானிகா பூபதிராஜா, நிலை 4B

# அறிதலே இன்பம்

**மோகன்ராஜ் ஷண்முகம், நிலை 8B ஆசிரியர்**

> *சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என ஐந்தின்*
> *வகை தெரிவான் கட்டே உலகு ( குறள்: 27 )*

> *கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்*
> *ஒண் தொடி கண்ணே உள ( குறள்: 1101 )*

### ஐம்புலன்கள்

தமிழ், இந்திய மரபுகள் கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவற்றை ஐம்புலன்கள் என்றும் ஞானேந்திரியங்கள் என்றும் சொல்லும். மனித உடலில் 78 பெரும் உறுப்புகள் இருக்க இந்த ஐந்து உறுப்புகளுக்கு மட்டும் ஏன் முக்கியத்துவம்?

இந்த ஐந்து பொறிகள் வழியாகத்தான் வெளி உலகின் தகவல், மூளைக்கு வருவதால் இவை முக்கியம். நம் இருப்புக்கு தகவல் மிக அவசியம். பெரும்பாலான தகவல் வருவது கண் வழியாகத்தான். கண்ணே என்று கொஞ்சுவதும், கல்வி போன்ற அவசியமனாவற்றை கண் என்று சொல்வதும் அதனால்தான். இந்த ஐந்து பொறிகளும் அவை தரும் தகவலை அலசும் மூளையும் இருப்பதால்தான், தலை தலையானது.



### இன்பம்?

**விடுகதை** *— ரிதானிகா பூபதிராஜா, நிலை 4B*


1. வெள்ளை நிற உடை அணிந்தவன். உள்ளே மஞ்சள் நிறம் கொண்டவன். அவன் யார்?
2. ஒரு வீட்டில் இரண்டு சகோதரர்கள். ஒருவர் வந்தால் மற்றவர் போவார். அவர்கள் யார்?

🤔 **சிந்திக்கவும்!**

*விடைகள் கடைசி பக்கம்*

தகவல் வரும் அதே பொறிகள் வழியாகத்தான் இன்பமும் துய்க்கிறோம். ஒரு சமயத்தில் எத்தனை புலன்கள் வழியாக அனுபவிக்கிறோமோ அத்தனை இன்பம். இசை, பேச்சு, படித்தல் இவை எல்லாம் ஒரு புலன் இன்பங்கள். காது மட்டும். கண்கள்


மட்டும். நாடகம் , திரைப்படம் - ஒரே சமயத்தில் கண்ணும் காதும் துய்க்கும் இரு புலன் இன்பங்கள். முன்னதை விட நுகர்வும் அதிகம். உணவு - ஒரே சமயத்தில் கண், மூக்கு, நாக்கு என மூன்று புலன்கள். நுகர்வு மேலும் அதிகம். திரைப்படத்துக்கு மதிப்பு கூட்ட பாப்கான் சேர்த்து மூன்று புலன் இன்பங்களாக ஆக்குகிறோம். மனதுக்கு இனியவர்களோடு



சேர்ந்து உண்டு, உணவை நான்கு புலன் இன்பமாக ஆக்குகிறோம்.ஐந்து புலன்களும் ஒரே சமயத்தில் இன்புற்றால் அதுவே உச்சம்.

**இன்பம் சலிப்பது ஏன்?**

புதுப் புது இசையை நாடுவது ஏன்? மிக ரசித்துப் பார்த்த திரைப்படம் ஒன்று அல்லது இரண்டு முறைக்கு மேல் பார்த்தால் சலிப்பது ஏன்? மிக சுவையான உணவும் தினம் உண்டால் சலிப்பது ஏன்? இன்பம் என்று கண், மூக்கு, நாக்கு வழியாக நாம் அனுபவித்தாலும், அது இன்பமாக மாறுவது நம் மூளையில். பொறிகள் வழியாக வரும் புதிய தகவலை மூளை அறிகிறது. அனுபவிக்கிறது. அதைத்தான் இன்பம் என்று உணர்கிறோம். நாம் இன்புற்றிருக்கும்போது பின்னணியில் தீவிரமான அறிதல் நடக்கிறது. மூளைக்கு புதிது புதிதாக அறிதல் நடக்க வேண்டும். ஏற்கனவே அனுபவித்த இன்பங்கள் மூளை முன்பே அறிந்தவை. இது பழசு, எனக்கு வேறு புதிய தகவல் வேண்டும் என்று மூளை சொல்வதுதான் சலிப்பு. புதியதாக ஒன்றை நாம் அனுபவிக்கும்போது அது மூளைக்கு புதிய தகவல், புதிய அறிதல். இன்பம் என்பது அறிதலே. அறிதலே இன்பம். ஆதலால் அறிக.




அஷ்மிதா கணேஷ், நிலை 4B




**அஷ்வின் கணேஷ்**

பேச்சுத் தமிழ்



சஷ்வந்த் அபிநாஷ், நிலை 1




சாரல் ஸ்ரீநிவாஸ், நிலை 8A

# என் செல்லம்

நவ்விழி செல்வக்குமார், நிலை 7

அப்பொழுது நான் மூன்றாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எனக்கு நாய்க்குட்டி என்றால் மிகவும் பிரியம். தெருவில் யாரேனும் நாய்க் குட்டியை பிடித்துக் கொண்டு நடந்து சென்றால் நான் உடனே சென்று அதைக் கொஞ்ச ஆரம்பித்து விடுவேன். என் பெற்றோரிடம் எனக்கும் ஒரு நாய்க்குட்டி வாங்கித் தருமாறு தினமும் கெஞ்சிக் கொண்டிருந்தேன். இது வரைக்கும் எனக்கு என் அப்பா அம்மா வாங்கி தரவில்லை.

ஒரு வித்தியாசமான நாள் எங்கள் வீட்டின் முன்னால் ஒரு சின்ன நாய்க்குட்டி இருந்தது. அந்த நாய்க்குட்டி சோகமாக படுத்திருந்தது. என் அப்பா அம்மா அந்த நாய்க்குட்டியை வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். எனக்கு அந்த நாய்க்குட்டியை பிடிக்கவில்லை. எனக்கு என்னுடைய கனவு நாய்க்குட்டி தான் வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தேன். அந்த நாய்க்குட்டி என் அன்னையை சுத்தி சுத்தி வந்தது. நான் அந்த நாய்க்குட்டியை திரும்பிக்கூட பார்க்கவில்லை.

## விடுகதை

*— ரிதானிகா பூபதிராஜா, நிலை 4B*

**3** நான் ஓடிக்கொண்டே இருப்பேன், ஆனால் கால்கள் இல்லை. நான் யார்?

**4** முகம் இருக்கிறது, ஆனால் கண்கள் இல்லை. கைகள் இருக்கிறது ஆனால் விரல்கள் இல்லை. நான் யார்?

🤔 **சிந்திக்கவும்!**

*விடைகள் கடைசி பக்கம்*

ஒரு வாரம் இப்படியே சென்றது . எனக்கு ஒரு நாள் உடம்பு சரியில்லை. என் பெற்றோர்கள் வேலைக்கு சென்றுவிட்டார்கள். என் தங்கையும் பள்ளிக்கு சென்று விட்டாள். நான் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டு இருக்கும்போது அந்த நாய் என் காலடியில் உட்கார்ந்து கொண்டது, எனக்கு துணையாக அருகிலேயே இருந்தது. அதை பார்த்து நான் மகிழ்ச்சி அடைந்தேன். இவ்வளவு நாள் எனக்கு பிடித்த கனவு நாயை பற்றி யோசித்து, என் வீட்டில் உள்ள இந்த அன்பான நாயை பார்க்காமல் போய்விட்டேன்.

பின்னர் என் உடம்பு சரியாகி விட்டது. அடுத்த நாள் வெளியே அந்த நாய்க்குட்டியை கூட்டிக்கொண்டு ஒரு நடைபயிற்சி சென்றேன். அந்த மதியம் எல்லோரும் வீட்டுக்கு வந்த பிறகு நானும் என் நாயும் தூங்கிக்கொண்டு இருந்தோம். எல்லோரும் என்னிடம் "உனக்கு இந்த நாய்க்குட்டி பிடித்திருக்கா" என்று கேட்டார்கள். என் அப்பா "உன் கனவு நாய்குட்டி வேண்டாமா", என்று கேட்டார்.




நான் அதற்கு “என் செல்ல நாய்க்குட்டி இங்கேதான் இருக்கிறது”. எனக்கு இன்று வரை அது புரியவில்லை. என்னோட செல்ல கனவு நாய்க்குட்டி என் கண் முன்னாலே தான் இருக்கிறது என்றேன். என் பெற்றோர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அந்த நாய்க்குட்டியும் மிகவும் சந்தோஷத்துடன் வாலை ஆட்டியது.

அன்பான நாய்க்குட்டி தான் என் கனவு நாய்க்குட்டி என்று புரிந்து கொண்டேன். அந்த நாய்க்குட்டிக்கு பெயர் இல்லை. அந்த நாய்க்குட்டி என் மகிழ்ச்சி. அதனால் அந்த நாய்க்குட்டிக்கு மகிழ் என்று பெயர் வைத்தேன்.

# எம்மொழி! செம்மொழி!

**பத்மநாபன் பொன்னையா ராஜு, நிலை 6B ஆசிரியர்**

எங்கு தொடங்குகிறது ஒரு மொழி? ஒரு குழந்தையின் அர்த்தமற்ற முதல் ஒலியாய்த் தொடங்குகிறது அதன் வேர். அது தன் கிளைகளைப் பரப்பி, ஆழத்துளையிட்டு ஒரு ஆலமரமாவதற்குள், அதற்குள் எத்தனை மாற்றங்கள்.

ஒவ்வொரு மாற்றத்தின்போதும் எந்தச் சிதிலமும் அடையாமல், அடையாளங்களை இழக்காமல் இருப்பதென்பது அரிதிலும் அரிது. அப்படிப்பட்ட இலக்கியச் சுவை இழக்காது, இளமை மாறாமல் இன்றும் ஒன்பது கோடிப் பேரால் கொண்டாடப்படும் மொழி ஒன்று உண்டெனில், அது தமிழ் தான்.

தமிழின் வயது தவறாகவே தரவிடப்படுதாகவே நான் உணர்கிறேன். மொழியியல் ஆய்வாளர்களுக்கும் இந்த குழப்பங்கள் இருக்கலாம். நன்றாக யோசித்துப் பாருங்கள், ஒரு குழந்தையின் முதல் மொழிபோல் ஒரு மொழி துளிர்விடுகிறது, எந்த வித அர்த்தமும் இல்லாமல் வெறும் ஓசை மட்டுமே, அதற்கு அர்த்தங்களை நாம் உருவாக்குகிறோம். அப்படியே ஒரே குழுவைச் சேர்ந்த, முதல் தமிழர்கள் இயற்கைக்கு பெயரிட்டு வேர்சொல்லை வேரிடுகிறார்கள். அதிலிருந்து மெல்ல மெல்ல பண்பாடு வளர வளர புது சொற்கள் உருவாகியிருக்கும்.

"கல்" என்ற இயற்கைக்கான சொல்லில் இருந்து கல், கல்வி, கற்றல், கற்பனை, கல்லறை தோன்றியிருக்கிறது. கல்லில் செதுக்கி படித்ததால் வெறும் பாறை கல்லாகிறது, கல்வியாகிறது. மனதால் செதுக்கப்படுவதால் கல், கற்பனை ஆகியிருக்கலாம் என தேவநேய பாவாணர் சொல்கிறார்.


எழுத்து, சொல்லாகி, அசையாகி, சீராகி, அடியாகி, எதுகை மோனைத் தொடையாகி கவிதையாக நீள எத்தனை ஆண்டுகளைக் கடந்திருக்கும். நினைவில் கொள்க, இன்றும் நம் பாட்டி "உரல்," "உலக்கை" என்று சொல்லும்போது, அச்சொற்களில் உறைந்திருப்பது, இரண்டாயிரம் ஆண்டுகளின் கதை.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக எழுதப்பட்டதாக அறியப்படும் திருக்குறள், தன் ஒவ்வொரு பாவிலும் இலக்கண வரையறைக்குள் உட்பட்டு, எந்த விதிகளையும் மீறாமல் எழுதப்பட்டதைப் பார்க்கும்போது, தமிழ் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வளவு பண்பட்டிருந்தால், அதற்கு முன் எத்தனை ஆண்டுகளாய், எத்தனை நிலங்களை ஆண்டிருக்கும்.

வெறும் தொன்மை மட்டுமே ஒரு மொழியை சிறப்பிக்கச் செய்வதில்லை, அதில் உள்ள இனிமையும், இலக்கணச் செறிவும், கல்வியும், அறிவும் ஒருங்கே அமைந்து பன்னெடுங்காலமாய், பலகோடிப் பேர்களால் பேசப்படுவதாலேயே!

எம்மொழி! செம்மொழி!


> ***"மந்தையிலேயொன்றாய் மாய்ந்திடா,***
> ***சிந்தையிலிருந்தும் தேய்ந்திடா,***
> ***நிந்தையில்கூட வீழ்ந்திடா,***
> ***விந்தையிலும் விந்தை இந்த***
> ***நெடுந்தமிழ்..."***
> ***– Padhu***




சஹானா சோலையப்பன், நிலை 3



மித்ரா சோலையப்பன், நிலை 4B




மகிழ் சேரா, நிலை 3B




முகிழ் சேரா, நிலை 3B

# செயற்கை நுண்ணறிவு மனிதனின் வாழ்கையை எவ்வாறு மாற்றுகிறது?

**சௌந்தர்யா சீனிவாசன், நிலை 8B**

செயற்கை நுண்ணறிவு என்று உலகம் முழுவதும் இன்று பேசப்படுகிறது. அதை omni invention என்று கூப்பிடுவார்கள். சற்று முந்தைய காலகட்டதிலிருந்து, நாம் AI காலத்திற்கு வருவோம்.

மனிதர்கள் இதுவரை இருபது முதல் இருபத்து நான்கு omni invention செய்துள்ளனர். அவை நெருப்பு, விவசாயம், மின்சாரம், தொழில்துறை புரட்சி, உள்வெடிப்பு இயந்திரம், கெபாசிட்டர்கள், இணையம், மற்றும் செயற்கை நுண்ணறிவு.

நெருப்பு மனிதர்களுக்கு பெரிய மாற்றத்தை கொண்டு வந்தது. அது உணவை சமைக்க உதவியது. இதனால் நமக்கு மென்று சாப்பிட வேண்டிய நேரம் குறைந்தது. சமைத்த உணவு எளிதில் ஜீரணமாவதால் வேகமாக சக்தி அளித்தது, இது வேட்டையாடும் திறனை அதிகப்படுத்தியது. மனிதனை புத்திசாலியாக மாற்றியது.

அச்சு கருவி கண்டுபிடிப்பதற்கு முன்பு, ஆண்டுக்கு வெறும் 50,000 புத்தகங்கள் மட்டுமே வெளியிடப்பட்டன. அச்சு கருவி வந்த பிறகு, ஆண்டுக்கு 50 லட்சம் புத்தக்கங்கள் வெளியிடப்பட்டது. இதனால் மக்கள் அறிவாளியாக மாற ஆரம்பித்தனர்.

உள்வெடிப்பு இயந்திரம் மூலம் தான் விமானங்கள் உருவானது. எனது முந்தைய தலைமுறை இந்த விமானத்தின் உதவியால் அமெரிக்கா வந்தார்கள். அதன் விளைவாக, நான் இன்று இங்கே வாழ்கிறேன்.

இணையம் நம் வாழ்க்கையில் அனைத்து விஷயங்களையும் மாற்றிவிட்டது. ஒரு பொருள் வாங்குவது, விற்பது, படங்கள் பார்ப்பது, படிப்பது, பகிர்வது போன்ற அனைத்து விஷயங்களை வெற்றிகரமாக செய்து கொண்டு இருக்கிறது.

இப்போது வந்துள்ளது செயற்கை நுண்ணறிவு. AI மூலம் மனிதர்கள் தங்கள் சிந்தனை திறனை ஒரு இயந்திரத்திற்கு கொடுக்கிறார்கள். இந்த இயந்திரங்கள் நம் சிந்தனையை விட ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தவை.

நம்மால் 20, 30, கிலோ எடையை தூக்க முடியும். ஆனால் ஒரு டிரக் 10 டன் எடையை எளிதில் தூக்கி செல்லும். அதேபோல் AI நம் சிந்தனையை பல மடங்கு அதிகரிக்கும். அப்படி நடந்தால் பல மடங்கு சிந்தனையும், பல மடங்கு சக்தியும் கிடைக்கும். அப்படி கிடைத்தால் எதிர்காலத்தில் மருத்துவம் வேகமாக வளர்ந்துவிடும்.

அதைப்போல் செயற்கை நுண்ணறிவு எதிர்காலத்தில் genetic editing மூலம் சக்கரை நோயை போல் பல நோய்களை குணப்படுத்திவிடும். அடுத்தது, இன்றைக்கு நம்மை சுற்றி தானாக ஓடும் வண்டிகள் நிஜமாகி விட்டன.

## விடுகதை

*— ரிதானிகா பூபதிராஜா, நிலை 4B*

**5** பறக்கிறது ஆனால் பறவை அல்ல. காற்றில் உயரம் செல்லும். அது என்ன?

**6** மரம் மேலே பிறந்து, மண்ணில் விழும். அது என்ன?

🤔 **சிந்திக்கவும்!**

*விடைகள் கடைசி பக்கம்*

அவை மனிதரை போலவே ஓட்டுகின்றன, ஆனால் அவை சோர்வடைவதில்லை. எதிர்காலத்தில் நாமே கார் வாங்க வேண்டிய அவசியம் இருக்காது; நாம் அழைத்தால், கார் தானாகவே வந்து நம்மளை அழைத்து செல்லும்.

தொடர்ச்சியாக, மனிதர்கள் உலகத்தை 2D ஆக மட்டுமே பார்க்கிறார்கள். ஆனால் AI உலகத்தை 20D, 100D, வரை எளிதில் முடியும். இதனால் அவை நம்மால் காண முடியாத patterns-யை கண்டுபிடிக்கும். AI-யின் உதவியுடன் நாமும் இதுவரை காணாத புதிய உலகை காணப் போகிறோம்.

மனித வரலாற்றை பார்த்தால், ஒவ்வொரு பெரிய கண்டுபிடிப்பின் போதும் மனிதர்கள் அச்சமடைந்தார்கள். “இயந்திரங்கள் நம்முடைய வேலையை பறித்து விடுமோ?” என்று நினைத்தார்கள். ஆனால் அது நமக்கு வேலை வாய்ப்பை கொடுத்தது. அதனால் மேலும் கண்டுப்பிடிப்புகள் நடந்தன.

உதாரணமாக, தொழில்துறை புரட்சிக்கு முன்பு குழந்தைகள் 12 முதல் 14 வயதிலேயே வேலை செய்ய ஆரம்பித்தார்கள். ஆனால் அதன் பிறகு 20 வயதுக்கு மேல் தான் வேலைக்கு செல்கின்றனர்.

முடிவாக, செயற்கை நுண்ணறிவு நம் நண்பர் மற்றும் உதவியாளர். நாம் அதை எப்படி செயல்படுத்துகிறோமோ, அது அப்படியே இருக்கும்.

**எழுத்தாளர்**: சௌந்தர்யா சீனிவான், நிலை 8B





நல்லினா செல்வக்குமார், நிலை 2



மானஸ்வினி பூபதிராஜா, நிலை மழலை




நித்திலன் திலீபன், நிலை 6A




லியா ரமேஷ், நிலை 4B

# எனது தமிழ்ப் பள்ளி

**ஜியா ரமேஷ், நிலை 8B**

சனிக்கிழமை காலை, நான் எழுந்தேன். அது வார இறுதி, அதனால் நான் எதையும் செய்யாமல் இருக்க ஆர்வமாக இருந்தேன். அப்போது திடீரென்று அன்று எனக்குத் தமிழ் பள்ளி இருக்கிறது என்று உணர்ந்தேன்.

எனக்கு திடீரென்று ஆர்வம் இல்லை. எனக்கு தமிழ் பள்ளிக்குச் செல்ல விரும்பவில்லை. அது எனக்கு ஒரு வேலை போலத் தோன்றியது. என் சகோதரி என் அம்மாவிடம், "போகலாம், போகலாம், போகலாம்!" என்று கத்திக் கொண்டிருந்தாள்.

என் அம்மாவும் எழுந்திரு என்று சொல்லிக்கொண்டிருந்தார். நான் வருத்தத்துடன் படுக்கையிலிருந்து எழுந்தேன். பல் துலக்கிவிட்டு ஓடி கீழே இறங்கினேன்.

நான் வழக்கமாக காலை உணவு சாப்பிடுவதில்லை, தமிழ் பள்ளிக்குப் பிறகு மதிய உணவு சாப்பிடுவேன். என் அம்மா எங்களை காரில் அவசரமாக ஏற்றி, நானும் என் சகோதரியும் ஏறினோம்.

நாங்கள் தமிழ் பள்ளிக்கு வந்தோம். நான் மாமாக்களை வணங்கிவிட்டு மெதுவாக மேல்மாடிக்கு என் வகுப்பறைக்குச் சென்றேன். எனக்கு முதலில் செல்ல விரும்பவில்லை, அதனால் மெதுவாக நடந்தேன். இறுதியாக வகுப்பறைக்குச் சென்றபோது, நான் முதல் ஆளாக இல்லை, ஆனால் கடைசி ஆளாகவும் இல்லை.

**விடுகதை**

*— ரிதானிகா பூபதிராஜா, நிலை 4B*

7 தலை இல்லாதவன் தலையை சுமப்பவன். அவன் யார்?

8 இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது -அது என்ன?

🤔 **சிந்திக்கவும்!**

*விடைகள் கடைசி பக்கம்*

நான் என் நண்பர்களுக்கு அருகில் அமர்ந்தேன், வகுப்புத் தொடங்கியது. வகுப்பு முழுவதும், தமிழ் பள்ளி ஒன்றும் அவ்வளவு மோசமானதல்ல என்பதை நான் உணர ஆரம்பித்தேன். அது உண்மையில் ஒருவிதத்தில் வேடிக்கையாக இருந்தது.

ஆசிரியர் பேசத் தொடங்கினார், நாங்கள் ஒரு விவாதம் நடத்தினோம். என் தரப்பு வாதம் வென்றது, அவ்வளவுதான், தமிழ் பள்ளி மோசமானதாக இல்லை.


அந்த நாள், தமிழ் பள்ளி என்பது பயப்பட வேண்டிய ஒன்று அல்ல, மாறாக ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டிய ஒன்று என்பதை நான் உணர்ந்தேன். அன்று நான் கற்றுக்கொண்ட புதிய மொழியைப் பாராட்டக் கற்றுக்கொண்டேன். அன்று முதல், நான் பள்ளிக்குச் சென்றதும் உடனடியாக வீட்டிற்குத் திரும்ப விரும்புவதில்லை.




வர்ணா ராமகிருஷ்ணன், நிலை 5B



ரிச்சா ஷிவராஜ்குமார், நிலை முன்மழலை




யாழினி ரகு, நிலை 4B

# எலி திருடுமா? உழைக்குமா?

ஜாஷ்ரிதா மாணிக்க கோபிகிருஷ்ணன், நிலை 6B



ஒரு நாள் ஒரு எலி திருடி சாப்பிட்டுக் கொண்டிருந்தது. எலி தப்பிக்கப் போகும்போது, ஒரு பெண் ஓட்டையை அடைத்து விட்டாள். எலி சாப்பிட நிறைய நாள் கிடைக்கவில்லை. ஒரு நாள் அந்த பெண் ஓட்டையை திறந்து விட்டாள். எலி மகிழ்ச்சியாக வெளியே போனது.

எலி அதன் வீட்டின் வழியில் விதைகளை பார்த்துவிட்டது. எலி விதைகளை வீட்டிற்கு எடுத்து சென்றது. எலி விதைகளை மண்ணில் புதைத்து விட்டது. ஒரு வருடத்திற்குப் பிறகு செடிகள் அழகாக வளர்ந்து அதற்கு உணவு கிடைக்க ஆரம்பித்து விட்டது.



எலி யோசித்தது, “நான் திருடியதால் இந்த பெரிய பிரச்சனை வந்தது. ஒரு வேளை நான் திருடாமல் இருந்திருந்தால் எனக்கு இந்த பிரச்சனை வந்திருக்காதோ?!!”

## விடுகதை

— ரிதானிகா பூபதிராஜா, நிலை 4B

9 தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் - அது என்ன?


10 காற்றை குடித்து காற்றில் பறப்பான். அவன் யார்?

🤔 சிந்திக்கவும்!


விடைகள் கடைசி பக்கம்

எலி திருடாமல் வாழ ஆரம்பித்துவிட்டது. எலி நினைத்தது போல் நிஜமாக பிரச்சனை வரவில்லை. எலி மகிழ்ச்சியாக உழைத்து வாழ்ந்தது.

**நீதி: திருடாமல் உழைத்து வாழ வேண்டும்.**




அவந்திகா விஜயகுமார், நிலை 4A




ஹர்ஷவர்தன் வரலு, நிலை 4A




ஷ்ரியா பாக்யராஜ், நிலை 4B




வாசவ் சிவா, நிலை 5B

# அன்னை மடி

## ✦ நிகரில்லா நிறை - ஈடில்லா இறைக்கு வந்தனம் (1) ✦

அரசு அமரும் ஆணை
முகத்தனுக்கு
முதல் வணக்கம்
அவன் தம்பி, எம் தமிழ் வளர்த்த
வடிவேலவனக்கு வணக்கம்
இவர்களை பெற்ற என் ஈசனுக்கு
வணக்கம்
என் நாவில் குடி கொண்ட கலை
மகளுக்கு வணக்கம்..

ஆன்றோர்களுக்கு வணக்கம்
எனை ஈன்றோர்க்கு வணக்கம்
நம் பள்ளி பெற்றோர்களுக்கு
வணக்கம்
உங்களை பெற்றோர்களாகிய
எனதருமை குழந்தைகளுக்கு
வணக்கம்

## ✦ அடியேன் தமிழ்ப் பொடியேன் (2) ✦

நான் பா தொடுக்கும் பாவலன்
அல்ல
யாப்பு அளித்த தொல்காப்பியன்
வழியும் அல்ல,
இவன் கம்பனின் கட்டுத் தரியும்
அல்ல

இது யாப்பில்லா கவிதை வழி
வந்த
புதுக்கவிதை.

இன்னும் சொல்லப் போனால்
நேர் நேர் தேமாவும்
நிரை நேர் புளிமாவும் தெரியாமல்
தேங்காவும், புளியும் மட்டுமே
தெரிந்த புதுக் கவிஞன் நான்...

என் அன்னை மேல் உள்ள அதீத
பற்றின்பால்
இங்கு எழுத வந்த என்னை
தமிழ் ஆன்றோர்கள்
என் பிழையை பொறுத்தருள்க...

## ✦ தன்னிகரில்லா தாய்மை (3) ✦

அம்மா என்ன ஒரு இணையில்லா
சொல்
என்னை ஈன்ற அன்னையே ,
உனை அரங்கேற்ற
இந்த ஆண்டு மலர் அச்சிடு
போதாது
இருப்பினும் தனயன் மனம்
தணியாது
உனை பற்றி சொல்லாமல்.

ஈரைந்து திங்கள் நான்
வாழ உன் வாழ்வை,
குருதியை, உணவை,
உயிரை, இடத்தை குடுத்தவள்
இலவசமாக..

வெளி வந்தபின்
அரிச்சுவடு தந்தாய்,
அறிவு தந்தாய் ,
அன்பு தந்தாய்,
இன்று
நான் நானை இருக்க நீயே
காரணம்,
உன் பாதங்களுக்கு கோடான
கோடி சரணம்

## ✦ தாய்மையின் மேன்மை (4) ✦

கர்ணனும், காமதேனுவும் ..
ஏன்
கற்பக விருச்சகமும் கூட
கற்க வேண்டும் உன்னிடம்
ஏன் எனில் இவர்கள்
கேட்டால் தான் கொடுப்பர்
ஆனால் நீயோ
கேட்காமலே கொடுப்பவள் உன்
பாசத்தை
மிகையாக சொல்கிறேன்
நீ பாகற்காய் சமைத்தாலும்
பாயாசமாய் தெரிந்தது
கஷாயம் கொடுத்தாலும்
கற்கண்டாய் இனித்தது
உன் பாசத்திற்கு தான்
எத்தனை சக்தி என்று.

தாயே
நீ பிரேமத்தின் பிரவாகம் ,
கர்ம யோகத்தின்
கலங்கரை விளக்கம்..

என் நிறை ஒன்றே கண்ட உனக்கு
இன்று நரை வந்ததும்,
உன் தாய்மையின் அழகு
குறையாத குன்று

நீ அமுத சுரபி ,
ஆம் , அன்று குடுக்க ஆரம்பித்தது
என்றும் நிற்கவே இல்லை.

## ✦ அன்னை மடி அந்நியமானது (5) ✦

பாரத தேவி எனை பெற்ற தாயக
சுதந்திர தேவி எனை வளர்த்த
தாயக
இங்கு பனியை எடுப்பது பணியாகி
போக ,
திரை கடல் ஒடி, திரவியம் தேட
வந்து இங்கு
கனவுகள் காட்சியாக,
உறவினர்கள் தூரமாக
நண்பர்கள் உறவினர்கள் ஆக;
காலம் தன் வேலையை செய்ய
சுதந்திர தேவி வாழ்க்கை தர
தேடியது கிடைத்தது..

ஆனால்
இந்த தனயன் தலை வைத்து கண்
உறங்க
நித்தம் அன்னை மடி
கிடைக்காமலே போனது...

## ✦ அன்னையர் தின வாழ்த்துக்கள் (6) ✦

இருப்பினும்
facetime தந்தவனையும்
whatsapp தந்தவனையும்
என் நெஞ்சார
வாழ்த்துகிறேன்


இது என் அன்னைக்கு மட்டும்
அல்ல
இங்கு உள்ள எம் தமிழ் குல
அன்னையர் அனைவருக்கும்
சமர்ப்பணம் ,
ஆம்
உங்கள் செல்ல குழந்தைகளின்
சார்பில்
அன்பு சமர்ப்பணம்..

ஈரேழு ஆண்டுகளுக்கு முன்பு
இதை நான் இயற்றியிருந்தாலும்
அன்றும் இன்றும் என்றும்
பொருத்தும் சொற்கள் இவை..

அன்னையே நீ எங்கிருந்தாலும்
வாழ்க!!


*— புனைவர்: இவன் மஹேஷ் கட்டளை, நிலை 6B ஆசிரியர்*

❧




**பக்கம் 1**

செழியன் சரவணன், நிலை 1




**பக்கம் 2**

செழியன் சரவணன், நிலை 1

# பி(இ)றவாக் கவிதை

சங்கிடை நின்ற நஞ்சாய், குச்சி
முனையிடை உறைந்த தீயாய்,
என்
நெஞ்சிடை தைக்கும் கவிதை!

நெஞ்சுடைத்து நெடுமரம்போல்
புறம்வரத்துடிக்கும்
பஞ்சி னிடையமர்ந்த பொறியாய்
ஒரு கருங்கவிதை!

சிந்தியதெலாம் சொல்லல்ல
சிலம்புதிர்த்த முத்தல்ல
சிறகிட்ட மாக்கவியென
அகந்தையின் கொடியில் ஆடிடும்
கவிஞர்களூடே
பந்தியிலமர்ந்து சமரும்
ஒரு பெருங்கவிதை!

எம் முந்தையெரென்ன மூடரா
வென
பிந்தியேவாழும் வீணரின் முகம்
அந்தியில்
வீழும் கதிரென செவ்வ
முந்தியேபேசும்
செங்கவிதை!

சாதிமதச் சாயங்கள் பூசி
சாயும்வரை மண்ணில்
பிரிவினைபேசி
சங்கம் வைத்து பொய்கள்வீசி
பங்கம் விளைக்கும் பகையருக்கும்
ஓர் அறக்கவிதை!

கண்டவர் பலர் நெஞ்சம், துயர்
கொண்டவரென விழிததும்ப
செய்யும்
கண்ணீர்க் கவிதை!

சொல்லவொன்னா
துயரங்களுடன் பிறக்கிறது
அக்கவிதை!

அதை பிறந்தவுடன்
கொன்றுவிடுகிறேன் நான்!

என் இதயமுடைத்து
இறந்துபோகிறது
அவ்விறவாக் கவிதை!

*— பத்மநாபன் பொன்னையா ராஜு, நிலை 6B ஆசிரியர்*

# கனவுப் பூச்சி (மீமெய்மைக் கவிதை)

இரவு
நினைவுகளை
அடுக்கிக் கொண்டிருந்தது!

தவறி விழுந்த
நினைகளிலொன்று
பெருவெடித்துப்
பிரபஞ்சமானது!

நட்சத்திரங்களுனூடே
அட்ரினலின் சிதற,
எரிகல்லாய்
விழுந்து கொண்டிருந்தேன்
நான்!

மற்றொரு நினைவு,
பிரபஞ்சம் தின்று,
இறக்கைகள் வளர்த்துக்
கொண்டிருந்தது!

உள்ளூர பறந்து
கண்களின் உட்சுவர்
முட்டிக் கொண்டிருந்தது!

அறிவியல் சத்தமிட,
என் இமைகிழித்துப் பறந்தது
கனவுப்பூச்சி,
மனக்கண்ணில்
கசிந்து கொண்டிருந்தது
ஞாபக எச்சம்!

*— பத்மநாபன் பொன்னையா ராஜு, நிலை 6B ஆசிரியர்*

# பாமலர்

தமிழ்நாட்டில் இருந்து தன் மகள் வீட்டுக்கு வருகை தந்திருந்த மேனாள் தமிழாசிரியர் திருமதி சாந்தி சொக்கலிங்கம் அவர்கள் நம் பள்ளியின் தமிழ்ப்பணி குறித்து அறிந்து நம்மைப் பாராட்டியதோடு நில்லாமல், தானும் இந்த மகத்தான முன்னெடுப்பில் பங்குபெற விரும்பி வாரம் தவறாமல் நம் பள்ளிக்கு வருகை தந்து ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு நிலைக்குச் சென்று நம் குழந்தைகளுக்கு அருமையான கதைகள் கூறியதோடு, நம் ஆசிரியர்களுக்கும் தன் அனுபவங்களை பகிர்ந்து கொண்டதோடு நல்ல பல ஆலோசனைகளையும் வழங்கினார்கள்.



அவர் விடை பெறும் போது அவர்களுடைய மாமனார் திரு.பேராசிரியர் சொ.அரியநாயகம் M.A. எழுதிய பாமலர் என்னும் குழந்தைகளுக்கான நூலை நம் நூலகத்துக்கு வழங்கினார்கள்.

கடல் கடந்து வந்து நம் பள்ளியில் தமிழ்ப்பணி ஆற்றிய அம்மா திருமதி. சாந்தி சொக்கலிங்கம் அவர்களுக்கு சங்கமம் தமிழ் பள்ளியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



# விடுகதை விடைகள்

விடுகதைகளுக்கான விடைகள்:

**1.** முட்டை | **2.** பகல் மற்றும் இரவு | **3.** நதி | **4.** கடிகாரம் | **5.** பட்டம் | **6.** பழம் | **7.** தலையணை | **8.** பட்டாசு | **9.** அன்னாசிப்பழம் | **10.** பலூன்

✉

**உங்கள் கருத்துகளை எங்களுக்கு தெரிவியுங்கள்!**

இந்தப் புத்தகத்தைப் படித்த உங்கள் கருத்துகள் மற்றும் அனுபவங்களை கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

it@sangamamtamilschool.org

# விழாக்களும் நினைவுகளும்

*Celebrations & Memories 2025–2026*

விழாக்களும் நினைவுகளும்

















விழாக்களும் நினைவுகளும்











# வகுப்பு நினைவுகள்

*Class Memories 2025–2026*

## வகுப்பு நினைவுகள்


















## வகுப்பு நினைவுகள்


















## வகுப்பு நினைவுகள்













2026-01 · மே 2026

சங்கமச் சுவடுகள்

